விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 003 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 06 வெள்ளிக்கிழமை (22.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பூநகரியில்
## கிணற்றுக்குள் தவறிவிழுந்த குழந்தை பலி

(பூநகரி)
பூநகரியில் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறிவிழுந்த 15

## எத்தகைய அழுத்தம் வந்தாலும் போதை வர்த்தகத்துக்கு முற்றுப்புள்ளி
### அமைச்சர் டிரான் அலஸ்



(கொழும்பு)
நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க'பூரண ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அதனால் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் போதைப்பொருள் வர்த்தகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரி 15

### பல இலட்சம் பெறுமதியான
## போதைப்பொருட்கள் வடமராட்சியில் மீட்பு
### பெண்ணொருவர் கைது

(கரணவாய்)
வடமராட்சிப் பகுதியில் நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது பல இலட்சத்திற்கு அதிகமான போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதோடு 16 கைத்தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன. 15



சனி மாற்றம்
நாளை முதல்
உங்கள் வலம்புரியில்
வாசிக்கத் தவறாதீர்கள்

# நல்லிணக்கத்தை காண்பித்து தொடர்ந்தும் ஏமாற்றாதீர்
## ரணிலிடம் சம்பந்தன் நேரில் தெரிவிப்பு

- இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுலாக்குமாறு ரணிலிடம் சம்பந்தன் வலியுறுத்து.
- புதிய பாராளுமன்றம் தெரிவாகிய பின் அரசியலமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாக ரணில் வாக்குறுதி.
- சுமந்திரன், விக்னேஸ்வரன் கூட்டத்தை புறக்கணிப்பு.

(04ஆம் பக்கம் பார்க்க)



### வவுனியாவில்
## குளத்தினுள் தவறிவிழுந்த இளம் பெண் மரணம்

(வவுனியா)
வவுனியா பாவற்குளத்தில் தவறிவீழ்ந்த இளம்பெண் ஒருவர் நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.
பாவற்குளத்தில் 15

## அதிபர் நியமனங்களின் தவறு நிவர்த்தியாக்கப்படும்
### அமைச்சர் டக்ளஸ்



15

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தில் அவ்வப்போது மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 15

## 'வட்ஸ்அப்' செயலி ஊடாக யாழில் போதை வியாபாரம்
### பொலிஸ் விசாரணைகளில் அம்பலம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் வட்ஸ் அப் செயலி ஊடாக போதை பொருள் வியாபாரம் நடைபெற்று வந்தமை பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்களில் இருவரை பொலி 15

DLB
DEVELOPMENT LOTTERIES
SUPER BALL
சுப்பர் போல்
இன்றைய சுப்பர் பரிசுப்பொதி (ரூ) 6 கோடிக்கும் அதிகமாகும்.
(ரூ.62,672,564/-)
(C-2196)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காரைநகர்

## கிழவன்காடு கலாமன்றம்

நடாத்தும்

# தெய்வீக கலையரங்கு

(திருவெம்பாவை 6 ஆம் நாள்)

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம் : 23.12.2023 சனிக்கிழமை பி.ப 3.00 மணி

**நிகழ்வுகள்**

மாணிக்கவாசகர் சுவாமிகள் மண்டபத்திற்கு எழுந்தருளல்
தீபாராதனை
வேதபாராயணம் - ஈழத்து வேத விற்பன்னர்கள்
திருவாசகம் ஓதல் - "திருவாசகக்குயில்" காரை லீலாவதி இராசரத்தினம் (கலாமன்ற இசை ஆசிரியர்)
இசைக்கச்சேரி :- "நுண்கலைமாணி" கந்தசாமி ரஜீவன்
சொற்பொழிவு :- "மாயம் அறுக்கும் மன்னன்"
வழங்குபவர் :- "சிதம்பரஜோதி" "தமிழருவி" த.சிவகுமாரன் அவர்கள்
கௌரவம் வழங்கல் :- ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் முதல் இடம்பெற்ற 72 வயதுப் பெண்மணிக்கானது
பெறுபவர் :- முல்லை, திருமதி, அகிலத்திருநாயகி சிறிசெயாணந்தபவன் அவர்கள்

**"சித்தாகாஸ்" வழங்கும் "நாட்டிய நிகழ்வு"**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு - நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல 428, கே.கே.எஸ் வீதி, வண்ணை சிவன் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்.

(C-7970)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பேருரை நாளை சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நல்லை ஆதீனத்தில் இடம்பெறும்.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசியுரையினை நல்லை திருஞானசம்பந்தர் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுாமிகள் அவர்கள் ஆற்றவுள்ளார். (ம-7)


## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்...

கனடா, பிரான்ஸ், போலாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு முற்பணம் எதுவுமில்லாமல் விரைவாக வீசாக்களை பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**Note - வங்கி வைப்புகள் மட்டும் காட்டினால் போதும்.**

**Hybrid International hub (pvt) ltd.**

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
யாழ்ப்பாணம்

077 815 5920, 076 250 0098, 021 222 1265

(C-7967)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் மாணவனாக, ஆசிரியராக, பதில் அதிபராக, அதிபராக சேவையாற்றி 22.12.2023 இன்று தொடக்கம் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

## திரு.சோமசுந்தரம் இராமநாதன்

(கோட்டக் கல்விப் பணிப்பாளர் - உடுவில்)

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் -
ஆசிரியர் கழகம்
யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்

(C-7969)

Best Wishes

# பெறுகை அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

தலைவர் பெறுகைக் குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அவர்களினால் 16.01.2024ஆம் திகதி தொடக்கம் 15.07.2024ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/45(3)/1/OS/2023/02 | சுகாதாரச் சேவை | 04 | 6,000.00 | 04.03.2024 |

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, தொலைபேசி இலக்கம் 0243243544 தொலைநகல் 0212050036 மின்னஞ்சல் pallaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் 22.12.2023 தொடக்கம் 04.01.2024 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. சேவை வழங்குநர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் 22.12.2023 தொடக்கம் 04.01.2024 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக) இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் 05.01.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
8. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 29.12.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

திருமதி.தர்சினி தயானந்தன்,
தலைவர்,
பெறுகைக்குழு,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

22.12.2023 (C-7968)

# பகிரங்க ஏல அறிவித்தல்

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2024.01.01- 2024.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்கஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் :- 2023.12.28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணி

பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.

பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்

| இல. | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இறுதித்தொகை |
|---|---|---|
| 1. | பசுமைப்பூங்கா அழகுக்கலை நிலையம் | 17,583.48 |
| 2. | மருதநகர் இயற்கை பூங்கா | 21,505.50 |
| 3. | பரந்தன் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 94,500.00 |
| 4. | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 2,886.84 |
| 5. | இரணைமடு சந்தை கோழியிறைச்சிக்கடை | 495,000.00 |
| 6. | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 6,845.75 |
| 7. | D8உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 193,549.50 |
| 8. | தர்மபுரம் மாட்டிறைச்சிக்கடை | 521,100.00 |
| 9. | வட்டக்கச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 639,864.00 |
| 10. | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 289,620.00 |
| 11. | வட்டக்கச்சி சந்தை கோழியிறைச்சிக்கடை | 585,495.00 |
| 12. | அக்கராயன் மாட்டிறைச்சி கடை | 43,137.27 |
| 13. | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 35,064.90 |
| 14. | புன்னைநீராவி சந்தை கோழி இறைச்சிக்கடை | 105,120.35 |
| 15. | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 34,092.93 |
| 16. | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 29,901.39 |

நிபந்தனைகள்

1. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2023.12.28 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
2. சித்தியடையும் ஏலகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
3. 2023.11.19 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளும் கருத்திற்கொள்ளப்படும்.

செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C-7966)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோதனை நடவடிக்கைகளால்

# சுமார் 26 கோடி ரூபா வசூல்

## நுகர்வோர் அதிகாரசபை அதிரடி

(கொழும்பு)

**இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் மூலம் 26 கோடி ரூபாவிற்கும் அதிகமான அபராத தொகை வசூலிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

ஜனவரி முதல் தற்போது வரை சந்தையில் சுமார் 22,000 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் சுமார் 21,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், இருப்புக்களை மறைத்து வைத்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலைகளை காட்சிப்படுத்தாமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக உரிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பண்டிகைக் காலத்தை இலக்காகக் கொண்ட சிறப்புத் திட்டத்தின் கீழ் 1,185 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த சோதனை நடவடிக்கைகள் அடுத்த சில நாட்களுக்கு தொடரும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-6)

# இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் பதவியேற்பு



(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகராக சிரேஷ்ட இராஜதந்திரியான சந்தோஷ் ஜா தனது கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண் டார்.

ஸ்ரீசந்தோஷ் ஜா இதற்கு முன்னர் பெல்ஜியத்திற்கான இந்திய தூதுவராக கடமையாற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய உயர்ஸ்தானிகராக கடமையாற்றிய கோபால்பாக்லே, அவுஸ்திரேலியாவிற்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பதில் பொலிஸ்மா அதிபரை சந்தித்த வைத்திய அதிகாரிகள் சங்கம்



(கொழும்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை சந்தித்துள்ளது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க செயலாளர் ஹரித அளுத்கே உள்ளிட்ட குழுவினர், பதில் பொலிஸ் மா அதிபரை நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்திப்பின் போது சமுதாயத்தில் தம்மை மருத்துவர்களாகக் காட்டிக் கொள்ளும் போலி வைத்தியர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்தியதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (நி-6)

# 6 மாதங்களுக்குள்

# போதைப் பாவனையை முற்றாக ஒழிக்க முடியும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் நம்பிக்கை



(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம் நாள் சுற்றிவளைப்புகளில் 2296 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே எதிர்வரும் 6 மாதங்களுக்குள் நாட்டில் போதைப்பொருள்பாவனையை முற்றாக இல்லாமல் செய்ய முடியும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (நி-6)

# பாடசாலைகளுக்கு இன்றுடன் விடுமுறை-கல்வி அமைச்சு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டின் மூன் றாம் தவணையின் முதல் கட்டம் இன்று வெள்ளிக்கிழமையுடன் முடிவடைவதாக கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றில் அறிவித்துள்ளது.

இதன்படி மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் அடுத்த ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு அரச மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு பொருந்தும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# சுமார் 4 பில்லியன் டொலர் கையிருப்பில்

(கொழும்பு)

இந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் அதிகாரபூர்வ கையிருப்பு நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமாக காணப்படும் என்றும் இது இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட அதிகமாகும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு அந்நிய செலாவணி வரவால் மொத்த கையிருப்பு கணிசமாக வலுப்பெற்றுள்ளதுடன் இந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் அரசாங்கம் 787 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியைப் பெற்றுள்ளதாக நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 337 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் டிசெம்பர் மாதத்தில் அரசாங்கம் இரண்டாவது தவணையாகப் பெற்றுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தை வலுப்படுத்துவதும் நாட்டின் வெளி கையிருப்புகளை மேம்படுத்துவதும் அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் ஏலத்தில் எடுக்கப்பட்ட இலங்கை வீரர்கள் மூவர்



உலகின் நம்பர் 1 இருபது -20 தொடரான ஐ.பி.எல் 2024 ஆம் ஆண்டுக்கான வீரர்கள் ஏலம் டுபாயில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிலையில் இலங்கை வீரர்கள் மூவர் இம்முறை ஐ.பி.எல் ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளனர்.

மும்பை அணி வேகப்பந்து வீச்சா ளர்களான திஸ்ஷன் மதுஷங்கவினை ரூ.4.60 கோடி, நூவான் துஷார ரூ.4.30 கோடிக்கு எடுத்து ள்ளனர்.

அதேபோல் இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவை ஏனைய அணிகள் எவையும் ஏலத்தில் எடுக்க முன்வராததால் சன்ரைசர்ஸ் அணி ஆரம்ப விலைக்கே அவரை ஏலத்தில்( 1.5 கோடி) எடுத்துள்ளது.

கடந்த வருடம் பெங்களூர் அணி இவரை பத்து கோடி ஏலத்திற்கு எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ரூ. 8.40 கோடிக்கு ஏலம்போன வீரர்



டுபாயில் 17 ஆவது சீசனுக்கான ஐ.பி.எல் 2024 ஏலம் நடந்தது. இதில் ஒவ்வொரு அணியும்போட்டி போட்டுக் கொண்டு வீரர்களை ஏலம் எடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் 20 வயதான இளம் வீரர் ஒருவரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஏலம் எடுத்தது. யார் அந்த 20 வயது வீரர் என்று பார்த்தால், உத்திரபிரதேசத்தில் இருபது-20 லீக் போட்டியில் 2 சதங்கள் அடித்து அசத்தியவர். டிஎன்பிஎல் தொடர் போன்று நடந்த இந்த தொடரில் கான்பூர் சூப்பர் ஸ்டார் அணிக்காக சமீர் ரிஸ்வி விளையாடினார். இதில், அவர் அதிக சிக்சர்கள் அடித்து சாதனை படைத்திருக்கிறார். இந்த தொடரில் விளையாடிய 9 போட்டிகளில் 2 சதங்கள் உட்பட 455 ரன்கள் எடுத்துள்ளார். (நி-6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில்
ஆசிரியராக கடமையாற்றிய

## திரு. அல்பிரட் நிமலகாந்தன்

அவர்கள் இலங்கை அதிபர் சேவை
தரம் IIIக்கு பதவி உயர்வு பெற்று
யா/நவாலி தெற்கு அ.த.க பாடசாலையில்
அதிபராக கடமையேற்றுள்ளமையை
பாராட்டி இப்புதிய பணியில் மென்மேலும்
சிறப்புக்களைப் பெற்று உயர்வடைய
உளமார வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்
நலன்புரிச் சங்கம். (18315)
யா/இணுவில் மத்திய கல்லூரி


# கில்லை முந்திய பாபர் அசாம்



ஒருநாள் போட்டிக்கான பட்ஸ்மேன்களின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று முன்தினம் வெளியிட்டது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தானின் பாபர் அசாம் மீண்டும் முதல் இடம் பிடித்துள்ளார்.

இந்திய அணியின் சுப்மன் கில் 2 ஆவது இடத்திலும் இந்திய அணியின் விராட் கோலி 3ஆவது இடத்திலும் ரோகித் சர்மா 4ஆவது இடத்திலும் உள்ளனர்.அவுஸ்திரேலியாவின் டேவிட் வார்னர் 5 ஆம் இடத்திலும் நியூசிலாந்தின் டேரில் மிட்செல் 6 ஆம் இடத்திலும் உள்ளனர். (நி-6)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 - 11 - 1954 | 21 - 12 - 2023 |

## திருமதி தேவிகா குணரட்ணம்

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவிகா குணரட்ணம் அவர்கள் நேற்று *21.12.2023* வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் முத்தையா குணரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் திருமதி கார்த்திகா ஆதித்தன் (சட்டத்தரணி) திருமதி தர்சிகா தர்சன் (சட்டத்தரணி-பதிவாளர், மாவட்ட நீதிவான் நீதிமன்றம், மன்னார்), திருமதி அனுசியா கஜேந்திரன் (உதவி பதிவாளர், வவுனியா பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராணி இராமநாதன், காலஞ்சென்ற கனகசிங்கம் சிறிகாந்தா, காலஞ்சென்ற பத்மினி விக்னேஸ்வரவேல், கனகசிங்கம் மகேந்திரன், கனகசிங்கம் ரவீந்திரன், நிர்மலா மோகன், வசந்தகுமாரி கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரஷானி, சாகித்தியா, தியானா, யாதனா, ஜவந்திகா, விஷ்ணுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *22.12.2023* வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

125/4, A.V வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
கே.கஜேந்திரன் (மருமகன்) 077 113 1453
கே.தர்சன் (மருமகன்) 077 627 2629

## நல்லிணக்க...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது நல்லிணக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது. காணி, மீள் குடியமர்த்தல், நல்லிணக்கத்திற்கு அமைவாக சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழக அகதி முகாம்களில் இருக்கும் இலங்கையரின் பிரச்சினைகள்,அரசியல் தீர்வு விடயங்கள், வடக்கு, கிழக்கு அபிவிருத்தி என்பன தொடர்பில் சாத்தியமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அரசியல் தீர்வற்ற வெறும் "நல்லிணக்கக் கொடியைக்" காண்பித்து தம்மைத் தொடர்ந்து ஏமாற்றவேண்டாம் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வித தீர்வையும் பெற்றுத்தராத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்மொழிவைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த அவர், அதில் சர்வதேச மேற்பார்வை மற்றும் புதிய நீதிமன்ற முறைமை உள்வாங்கப்பட வேண்டியது அவசியம் என சுட்டிக் காட்டினார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைகளைப் பலப்படுத்துவது குறித்து ஆராய்வதுடன், அடுத்த புதிய பாராளுமன்றம் தெரிவாகி ஒரு வருடத்துக்குள் புதிய அரசியலமைப்பு உருவாக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக வாக்குறுதியளித்தார்.

இச்சந்திப்பை கடந்த 13 ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் அச்சந்திப்பு பிற்போடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆஷு மாரசிங்க, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், தவராஜா கலையரசன், ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு



(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை கால த்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

அதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் ஏற்கனவே இரண்டு விசேட சுற்று நிருபங்களை வெளியிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத் தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள் ளார்.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு இன்று முதல் விசேட பேருந்து மற்றும் புகையிரத சேவை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிறிஸ்துமஸ் மற்றும் பள்ளி விடுமுறை நாட்களில் கிராமப் புறங்களுக்கு செல்லும் மக்க ளுக்காக இந்த சிறப்பு பேருந்து மற்றும் ரயில் சேவை இயக்கப்படும்.

இதன்படி இன்று முதல் 100 மேலதிக பேருந்துகள் நீண்ட தூர சேவைக ளுக்காக சேவையில் ஈடுபடு த்தப்பட வுள்ளன. (நி-6)

# யாழில் சூடுபிடித்துத்துள்ள சவுக்கு மரக்கிளை

(யாழ்ப்பாணம்)


யாழில் சவுக்கு மரக்கிளை வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை யேசு பாலன் பிறப்பினை முன்னிட்டு நாகர் கோவில், மணல் காடு ஆகிய பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட சவுக்கு மரக்கிளை வியாபாரமே சூடுபிடித்துள் ளது.



சவுக்கு மரக்கிளை ஒன்று ரூ.600 தொடக்கம் 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (நி-6)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 . 04 . 1962

மறைவு 13 . 01 . 2022

### அமரர். மாசிலாமணி - சிறிதரன்

(ஊழியர், யாழ்ப்பாண மாநகரசபை)

*(திதி: 22.12.2023)*

ஆற்றுப்படுத்தி வழிகாட்டினீர்
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறாது உம் பிரிவுத்துயர்
ஆண்டவனடியில் ஆறுதலடைய
ஆத்மார்த்தமாய் பிரார்த்திக்கின்றோம்.

அபிராமி,
மனோகரா,
அல்வாய்.

மனைவி, பிள்ளைகள்
மற்றும் சகோதரிகள்.

(18303)

## 12ம் ஆண்டு நினைவலைகள்



### வைத்திய கலாநிதி மருசலீன்பிள்ளை மரியதாசன் (JP)

(பேரின்பம்-வல்வெட்டித்துறை)

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி

(MOH:2001-2011)

மண்ணில் 12.07.1942

விண்ணில் 22.12.2011

(18294)

ஆவேமரியா,
72, கோயில் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றென்றும் நினைவுகளுடன் :
யாழ்.மாநகரசபை சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
உறவினர்கள், மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள்-தேசன், யோவான் அருணன், ஆன்கிறிஸ்ரா, அருள், விக்ரரினா.

# இராசிபலன்

22.12.2023
மார்கழி 06, வெள்ளிக்கிழமை
தசமி முற்பகல் 10.05 மணிவரை

அச்சுவினி முன்னிரவு 11.22 மணிவரை
சுபநேரம் -6.25-7.55 மணிவரை
இராகுகாலம்-10.55-12.25 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரம், உத்தரம்

**வளவன்**



**மேஷம்**

நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், விட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.



**ரிஷபம்**

வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



**மிதுனம்**

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.



**கடகம்**

திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.



**சிம்மம்**

உறவினர் பகை மாறும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், ரோக பயமுண்டு.



**கன்னி**

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



**துலாம்**

சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.



**விருச்சிகம்**

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், காரிய அனுகூலமுண்டு.



**தனுசு**

வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.



**மகரம்**

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



**கும்பம்**

சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.



**மீனம்**

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

தொடக்கத்தை [illegible]மாக அறுவடை செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரம்மனின் ஆணவத்தை அகற்றி, அருளொளி பரப்பிய சிவனின் திருவிளையாடல் பிரம்ம சிரச்சேத உற்சவமாக நேற்று முன்தினம் நல்லூர் சிவன் கோவிலில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்.)


# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டிற்கான NVQ சான்றிதழ் தர (மட்டம் 3.4) மற்றும் NVQ டிப்ளோமா தர (மட்டம் 5.6) கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

முழு நேரகற்கை நெறிகள் இலவசமானவை. தரம் 10 தகைமை உடையோர் முதல் க.பொ.த (உ/த) (A/L) உயர்தர தகமை உடையோர் வரை கற்கக் கூடிய கட்டட நிர்மாணத் துறை, தன்னியக்க இயந்திரவியல், மின் மற்றும் இலத்திரனியல், வர்த்தகம் மற்றும் மொழித்துறை, கணனிசார், தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் போன்ற துறைகள் சார்ந்த 43 கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேற்படி கற்கை நெறியை பயில விரும்பும் தகுதியுடையோர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கமுடியும். மேலதிக விபரங்களை dtet.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம். அல்லது தொழில்நுட்பக்கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ, 021 222 0028, 021 222 2358 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (நி-6)



தென்மராட்சி -மிருசிவில் பகுதியில் கடந்த 2000 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட எட்டு பொதுமக்களுடைய 23 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் மிருசுவில் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

(படம்: சுபேசன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 420 | 500 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1400 | 1200 |
| தக்காளி | 650 | 700 | 650 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 140 | 150 |
| கோவா | 450 | 380 | 400 | 500 |
| கரட் | 450 | 500 | 550 | 500 |
| பூசணி | 200 | 180 | 180 | 200 |
| புடோல் | 300 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 500 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 600 | 800 | 650 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 230 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 500 | 600 | 450 | 500 |
| லீக்ஸ் | 300 | 350 | 380 | 400 |
| பீற்றூட் | -- | 600 | 600 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 650 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | 2000 |
| போஞ்சி | 350 | 400 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 400 | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 200 | 200 |
| தேசிக்காய் | 600 | 700 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 500 | 500 |
| வெங்காயப்பூ | -- | -- | 600 | -- |
| முள்ளங்கி | 150 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 80 | 60 |
| ஈரப்பலா | 100 | 160 | 100 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2997

### சசிகரன்




### வசிகரன்




### தர்சிகா




### மதுசன்




### ரகுதரஸ்





### சஞ்சீவன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காலக் கண்ணாடியாக விளங்கும் வலம்புரி

இருபத்து நான்கு ஆண்டுகள் நிறைவில் தடம் பதிக்கும் நடுவுநிலை தவறாத நன்னெறி காக்கும் வலம்புரிப் பத்திரிகையின் இருபத்தைந்தாவது அகவையில் வாழ்த்து தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வை தருகிறது.

ஒவ்வொரு நாளும் ஒரு குழந்தையை பிரசவிப்பது போன்றதொரு நிலையிலேயே நாளேடுகள் ஒவ்வொரு நாளும் தனது பிரதிகளை வெளிக்கொணரும் என்றால் தவறில்லை.யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடர்காலங்களிலும் தன்னாலான பணியை பத்திரிகை தர்மத்தோடு மக்களின் மனங்களை வென்ற வகையில் வெற்றி நடைபோடுவது இலகுவான காரியமல்ல. தனிச்சிறப்பான பல்வேறு அம்சங்களை தாங்கி வரும் வலம்புரி தரமான அரசியல் ஆய்வுக்கட்டுரைகள், உள்ளூர், வெளியூர் உலக நடப்பு விபரங்கள் பக்கச்சார்பின்றி உள்ளதை உள்ள படி காட்டும் காலக் கண்ணாடியாக மிளிருவது வலம்புரி பத்திரிகையின் தனிச்சிறப்பு எனக் குறிப்பிடலாம்.

நீதியும் மனச்சாட்சியும் இறைநம்பிக்கையும்,நிறைந்த கருத்துக்களை ஆசிரியர் தலையங்கம் உட்பட அனைத்தும் இலகிக்க கூடிய வகையில் அமையும்.அதே வேளை அனைவரும் விரும்பி படிக்கும் பல்வேறு அம்சங்களை தன்னகத்தே கொண்டு வெளிவரும் நாளிதள் என்பதில் ஐயமில்லை .வலம்புரி தனது பணியை தொடர்ந்து சிறப்புடன் செயற்பட எல்லாம் வல்ல இறைவனதும் மக்களின் பேரன்புக்கும் பாத்திரமாக அமைய வேண்டி என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் மகிழ்கின்றேன்.

**அம்பலவாணர் சிவபாலசுந்தரன்,**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்.**

# வேகமாகப் பரவும் கொரோனா பிறழ்வு
## சுகாதார வல்லுனர்கள்

(கொழும்பு)

புதிய ஒமிக்ரோன் பிறழ்வு வேகமாக பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தியா, சீனா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் JN.1 பிறழ்வு கண்டறியப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் மக்களுக்கான ஆபத்து தற்போது குறைவாக உள்ளதாகவும் தற்போதைய தடுப்பூசிகள் தொடர்ந்தும் பாதுகாப்பை வழங்குவதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

எனினும் குளிர்காலத்தில் கொரோனா மற்றும் பிற நோய் தொற்றுகள் அதிகரிக்கலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (நி-6)


தென்னாடு

# மார்கழிப் பெருவிழா 2023

திருவாசகத்தில் கற்போர்மனதைப் பெரிதும் கவர்வது; இலக்கியச்சுவையா? பத்திச்சுவையா?

நடுவர்
செந்தமிழ்சொல்லருவி.ச.லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



இலக்கியச்சுவையே! | பத்திச்சுவையே!



செல்வன்.ஜெயபாலன் தவேதன்
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



செல்வன் குணராசா மிதுராஜ்
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



செல்வி. அபிநயா றஜீபன்
(மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)



செல்வி.கனிமொழி கணேசானந்தன்
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)



செல்வன்.மகேந்திரன் திகழ்ஒளிபவன்
(மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி)



செல்வி. ஆதிரை பிரதீபன்
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)

(C-7962)

2023.12.25 அன்று மார்கழிப் பெருவிழாவின் மாலை அரங்கில் இலங்கைவேந்தன் கல்லூரியில் இடம்பெறும்



உ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா - 2023

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் (கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடாத்த திருவருள் கூடியுள்ளது.

**மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மங்களநாதர் திருக்கோயில் வழிபாட்டுடனும் மற்றும் திருமுறை, நால்வர் பல்லக்கில் திருவீதியுலாவிற்கு எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**

(காலை 8.45 மணி தொடக்கம் 12.30 மணிவரை)

- 8.45 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- 9.00 மணி - தொடக்க உரை - சிவத்திரு. **குணரத்தினம் பார்த்தீபன்** (முதல்வர்-தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
- 9.10 மணி- அருளுரை-தவத்திரு.**வேலன் சுவாமிகள்** (முதல்வர்-சிவகுரு.ஆதீனம்)
- 9.20 மணி- திருமுறை விண்ணப்பம்-சிவத்திரு.**பத்மநாதன் சிவமைந்தன்** குழுவினர்
- 9.45 மணி- தலைமை உரை -கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவசித்தாந்தத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.00 மணி- வாழ்த்துரை - பேராசிரியர்.**சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.15 மணி- சிறப்புரை - தலைப்பு - **"பெரியபுராணமும் திருவாசகமும்"** வழங்குபவர் - **சிவ.பவானி அ.தியாகராசன் ஐயா** (அரன்பணி அறக்கட்டளை)
- 12.15 மணி-கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களைச் சிறப்புச் செய்யும் நிகழ்வு

**அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்**

**(1.30 மணி முதல் 4.30 மணிவரை)**

- 1.30 மணி -தலைமை உரை - சிவத்திரு **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரிப் பத்திரிகை)
- 1.45 மணி - சிவதாண்டவம் (யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)
- 2.00 மணி- சிறப்புரை - தலைப்பு - **"நானோ இதற்கு நாயகமே"** வழங்குபவர் - சிவத்திரு.**ச.விநாயகமூர்த்தி ஐயா** (ஓய்வுநிலை போதனா ஆசிரியர்)
- 3.00 மணி-பட்டிமண்டபம்-தலைப்பு-**'திருவாசகத்தில் கற்போர் மனதை ஈர்ப்பது, பத்திச்சுவையே!- இலக்கியச்சுவையே!'**
- 4.00 மணி- பரிசளிப்பு நிகழ்வு-திருவாசகக் கட்டுரைப்போட்டிக்கான பரிசில் வழங்கல்
- 4.20 மணி- நன்றியுரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 222 9722 / 070 770 1111.**

**விழா அனுசரணை-**

Ken Tower | LAND MAARK ENGINEERING (PVT) LTD

(C-7963)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் போட்டியிட முடியாது

## நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



(வோஷிங்டன்)

2024 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவதற்கு கொலராடோ உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கடந்த முறை நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதிக்கான போட்டியில் டொனாலட் ட்ரம்ப் போட்டியிட்டார். ஏற்கனவே ஜனாதிபதி பதவியில் இருந்து 2 ஆவது முறையாக போட்டியிட்ட அவர், ஜோபைடனிடம் தோல்வியடைந்தார்.

இருந்த போதிலும் டொனால்ட் தனது தோல்வியை ஏற்க மறுத்து வந்தார். அவரது ஆதரவாளர்களும் டொனா லட் ட்ரம்ப் தோல்வியை ஏற்க மறுத்தனர். மேலும், அமெரிக்க பாரா ளுமன்றத்தில் நுழைந்து போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தில் டொனால்ட் ட்ரம்பிற்கு பங்கு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பாக அமெரிக்காவின் பல்வேறு மாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வகையில் கொலராடோவில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்தவழக்கு விசாரணை முடிவில், டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது.

மேலும், குடியரசு கட்சி சார்பில் யார் வேட்பாளர் என்பதற்கான தேர்தல் நடைபெறும் போது, வாக்குச் சீட்டில் அவ ரது பெயர் இடம் பெறக் கூடாது. ஒரு வேளை பெயர் இடம் பெற்றாலும் அவருக்கு வாக்களித் திருந்தால் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது எனத் தெரிவித்துள்ளது. இருந்த போதிலும் ஜனா திபதிக் கான முக்கியமான தேர்தலில் தடை விதிக் கப்பட வில்லை .

இந்த தீர்ப்பை எதிர்த்துள்ள டொனால்ட் தரப்பினர், மேல்முறையீடு செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

மேன் முறையீடு செய்யும் வகையில் இந்தத் தீர்ப்பு அடுத்த ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# ஐஸ்லாந்...

## 4 ஆயி...

(ரெய்க்காவிக்) -...

ஐஸ்லாந்தில் ெ...
எரிமலை திடீரெ...
பகுதியில் வசிக்...
பாதுகாப்பாக வெ...

உலகின் 18 ஆவது பெரிய தீவாக, வடக்கு அட்லாண்டிக் கடலில் அமைந்திருக்கிறது ஐஸ்லாந்து நாடு. இந்த நாட்டின் ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை திடீரென வெடித்து சிதற தொடங்கியுள்ளது.

கிரின்டாவிக் நகரத்தில் இருந்து 4 கிலோ மீற்றர் ...

# போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் தயார்

(ஜெருசலேம்)

காசாவில் 2 ஆவது மனிதாபிமான போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் தயாராக இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் போர் நிறுத்தம் தொடர்பான பேச்சு வார்த்தைக்கு ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட தலைவர் இஸ்மாயில் ஹனியே எகிப்துக்கு செல்கிறார்.

இதற்கிடையே ஐ.நா. பாதுகாப்பு சபையில் போர் நிறுத்தத்திற்கான தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப் பட்டுள்ளது. (நி-5)



# மோசமடையும் செங்கடலின் பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கும் பிரிட்டன்

(லண்டன்)

செங்கடலில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதாகவும் பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் அதிகரித்த அச்சுறுத்தலாக இருப்பதாகவும் பிரிட்டன் எச்சரித்துள்ளது.



செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்காக, ஏமனில் ஹவுதிகள் அதிகரித்து வரும் தாக்குதல்களில் இருந்து கப்பல் போக்குவரத்தைப் பாதுகாக்க, முக்கிய வர்த்தகப் பாதைகளைப் பாதுகாக்க, கப்பல்களின் பணிக் குழுவை அமைப்பதாக அமெரிக்கா முன்னதாக கூறியிருந்தது.

இருப்பினும் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதன் காரணமாக குறித்த பகுதியூடான போக்குவரத்தை தவிரக்குமாறு மிகப் பெரிய கப்பல் நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன.

பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று முன்தினம் செங்கடலில் சந்தேகத்திற்கிடமான ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்திய HMS டயமண்ட், அதிகரித்து வரும் அச்சுறுத்தல் அளவுகள் தற்போதைய நிலைவரத்தை தெளிவாக படம்பிடித்து காட்டுவதாக கூறியுள்ளது.

இந்த சட்டவிரோத தாக்குதல்கள் உலகப் பொருளாதாரத்திற்கு ஏற்றுக் கொள்ள முடியாத அச்சுறுத்தலாகும். பிராந்திய பாதுகாப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் எரிபொருள் விலையை உயர்த்த அச்சுறுத்துகிறது என்று பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சர் பிரான்ஸ் சாக்ஸ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (நி-5-6)


# எ...
# மீ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ந்தில் ஆக்ரோஷத்துடன் வெடித்த எரிமலை

# ...பிரம் மக்கள் வெளியேற்றம்!



...)

...ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள ...ரென வெடித்து சிதறியதால், அப் ...க்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

...தொலைவில் உள்ள இந்த எரிமலை நேற்று முன் தினம் இரவு ஆக்ரோஷத் துடன் வெடிக்க தொடங்கி தீப்பிழம்பை கக்கி வருகிறது.


இந்த எரிமலை கடந்த ஒரு வாரமாக குமுறிக் கொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெடித்துச் சிதறியுள்ளது.

இதன் காரணமாக கிரின்டாவிக் பகுதியில் வசிக்கும் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், அவசரமாக வெளியேற்றப்பட்டு அவர்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக எரிமலையை சுற்றியுள்ள நகரங்களில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது.

இந்த எரிமலை வெடிப்புக்கு சில மாதங்களுக்கு முன்பு ரெய்க்ஜேன்ஸ் தீப கற்பத்தில் ஆயிரக்கணக்கான நிலநடுக்கங்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ...எகிப்து ஜனாதிபதியாக ...மீண்டும் அல்-சிசி



(கைரோ)

எகிப்து ஜனா திபதி தேர்தலில் ...ற்போதைய ஜனா திபதி ...அப்தெல் ஃபட்டா அல்-சிசி 3 ஆவது முறையாகத் தேர்ந்தெடு...கப்பட்டுள்ளார்.

அந்த நாட்டின் அடுத்த ...ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்...கான தேர்தல் கடந்த 10 முதல் ...2 ஆம் திகதிவரை நடை பெற்...றது. அதன் முடிவுகள் கடந்த ...திங்கள்கிழமை அறிவிக்கப்பட்டன.

அதன்படி, அல்-சிசிக்கு ஆதரவாக 89.6 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதையடுத்து, நாட்டின் ஜனாதிபதியாக அவர் 3 ஆவது முறையாக பதவியேற்க விருக்கிறார்.


மேற்கத்தேய நாடுகளுடன் நெருங்கிய நட்புறவைப் பேணி வரும் அல்-சிசி, மனித உரிமை மீறல்களிலும் அரசியல் எதிரிகளை நசுக்கும் செயலிலும் ஈடுபட்டு வருவதாக விமர்சிக்கப்பட்டு வருகிறார். (நி-5-6)

## கிறிஸ்மஸ் மரம் போன்ற தோற்றத்தில் ஒளிர்ந்த நட்சத்திரக் கூட்டம்

### நாசா வெளியிட்ட புகைப்படம்

(வோஷிங்டன்)

உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டங்கள் களை கட்டி உள்ள நிலையில், கிறிஸ்துமஸ் மரம் போன்ற தோற்றத்தைக் கொண்ட நட்சத்திரக் கூட்டங்களின் புகைப்படத்தை நாசா வெளியிட்டுள்ளது. இந்த படம் சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.



டிசெம்பர் 25 இல் உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் கொண்டாடப்படவுள்ள நிலையில் நாசா வெளியிட்டுள்ள ஒரு புகைப்படம் ஆச்சரியத்தை உருவாக்கியுள்ளது.

பூமியில் இருந்து சுமார் 2,500 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் கிறிஸ்மஸ் மரம் போன்ற வடிவில் உள்ள நட்சத்திரக் கூட்டத்தை நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சந்திரா கண்காணிப்பகம் படம் பிடித்துள்ளது. நமது பால்வழி அண்டத்தில் சூரிய குடும்பத்துக்கு அடுத்தப்படியாக பச்சை நிறத்தில் இந்த விண்மீன் திரள்கள் காட்சியளிக்கின்றன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் ( இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு.கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01 ஆம் திகதிய 2234/39ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 30 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும், அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4 ) பங்கினர், அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத் தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் இருவராவது 18-35 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிக்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2023.12.24 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொடர் இலக்கம் | கிளை இலக்கம் | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர்கள் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம். |
|---|---|---|---|---|
| 1 | 1 | சுன்னாகம் | திரு கணபதிப்பிள்ளை செந்தூரன் | தலைமைக்காரியாலயம். சுன்னாகம் |
| 2 | 2 | சுன்னாகம் | திருமதி.சிறிக்குமரன் இமெல்டா | தலைமைக்காரியாலயம். சுன்னாகம் |
| 3 | 3 | கந்தரோடை. சுன்னாகம் | திரு.சோமசுந்தரம்.தங்கேஸ்வரன் | யா/நாகேஸ்வரி வித்தியாலயம். சுன்னாகம் |
| 4 | 4 | கந்தரோடை | திரு.இராசரத்தினம்.வேல்குமார் | கிளைக்கட்டிடம். கே.கே.எஸ் வீதி. சுன்னாகம் |
| 5 | 5 | உடுவில் | செல்வி.சிவநாதன் துளசி | ஐசபி பழரசத் தொழிற்சாலை. ஆலடி. உடுவில் |
| 6 | 6 | சாங்குவேலி | செல்வி.நாகராசா கோபினா | கிளைக்கட்டிடம். சங்குவேலிப் பிள்ளையார் கோவிலடி |
| 7 | 7 | உடுவில் | திரு.சண்முகம் சசீந்திரன் | ஐசபி பழரசத் தொழிற்சாலை. ஆலடி. உடுவில் |
| 8 | 8 | மல்வம் | திரு.பாலச்சந்திரன் பாலரவி | கிளைக்கட்டிடம். மல்வம். உடுவில் |
| 9 | 9 | ஈஞ்சடி வைரவர் கோவிலடி. இணுவில் | திரு.சிங்கராசா சியாந்தன் | கற்பகப் பிள்ளையார் கோவில் சனசமுக நிலையம். உடுவில் |
| 10 | 10 | தாவடி தெற்கு | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் | கிராம சேவையாளர் அலுவலகம் J/192. தாவடி |
| 11 | 11 | தாவடி பிள்ளையார் கோவிலடி | திரு.யோசேப்.ஜெகதாஸ் | தாவடி மத்திய சனசமுக நிலையம். தாவடி |
| 12 | 12 | இணுவில் பரராஜசேகரர் பிள்ளையார் கோவிலடி | திருமதி.உதயகுமார் சுபாசினி | யா/ இணுவில் இந்துக் கல்லூரி |
| 13 | 13 | இணுவில் கோவில் வாசல் | திருமதி. சிவகௌரி ரஜீவன் | கிளைக்கட்டிடம். கோவில் வாசல். இணுவில் |
| 14 | 14 | இணுவில் கிழக்கு | செல்வி. விஜயகுமார் நிரோசியா | யா/ இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு மண்டபம் |
| 15 | 15 | இணுவில் மேற்கு | திருமதி.சுரேஸ்கண்ணா பிருந்தா | யா/ இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு மண்டபம் |
| 16 | 16 | றொட்டியாலடி. உடுவில் | திருமதி.கஜபதி கௌசியா | யா/ உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை |
| 17 | 17 | கே.கே.எஸ் வீதி. சுன்னாகம் | திரு.இராஜசிவம் தனுசன் | யா/ உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை |
| 18 | 18 | புன்னாலைக்கட்டுவன் | திரு.மகேசன் நிசாந்தன் | யா/ சித்தி விநாயகர் வித்தியாசாலை.புன்னாலைக்கட்டுவன் |
| 19 | 19 | ஈவினை | திரு.நாகலிங்கம்.குமணதாசன் | கிளைக்கட்டிடம். ஈவினைப் பிள்ளையார் கோவில் |
| 20 | 20 | குப்பிளான் | திரு.கனகரத்தினம் வக்சன் | கிளைக்கட்டிடம். குப்பிளான் |
| 21 | 21 | ஏழாலை வடக்கு | திரு.விநாசித்தம்பி.சிவபாலன் | கிளைக்கட்டிடம். ஏழாலை வடக்கு |
| 22 | 22 | ஏழாலை கிழக்கு | திரு.கனகரட்ணம் திசாகரன் | கிளை 21 கிளைக்கட்டிடம். ஏழாலை வடக்கு |
| 23 | 23 | ஏழாலை தெற்கு. மயிலங்காடு | திரு.அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | யா/ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலை. மயிலங்காடு |
| 24 | 23A | மயிலங்காடு | திரு.பரமசிவம் தவப்பிரியன் | யா/ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலை. மயிலங்காடு |
| 25 | 24 | ஏழாலை தெற்கு. விளிசிட்டி | திரு.இரத்தினராசா கஜந்தன் | கிளை 25 இன் கிளை கட்டிடம். ஏழாலை மேற்கு.ஏழாலை |
| 26 | 25 | ஏழாலை மேற்கு | திரு.சிவசிதம்பரம் சிறிதரன் | கிளை கட்டிடம். ஏழாலை மேற்கு. ஏழாலை |
| 27 | 26 | திடப்புலம். ஈவினை | திரு.சிவலிங்கம்.பிரதீபன் | கிளை கட்டிடம். திடப்புலம் ஈவினை |
| 28 | 28 | மயிலணி | திரு.தங்கராசா.கண்ணதாசன் | கிளை கட்டிடம். மயிலணி முருகன் கோவிலடி |
| 29 | 29 | கற்பகப் பிள்ளையார் | திரு.செகராசா பகீரதன் | கற்பகப் பிள்ளையார் கோவில் சனசமுக நிலையம். உடுவில் |
| 30 | 30 | வடக்கு புன்னாலைக்கட்டுவன் | திரு.சந்திரசேகரம் விஜயானந்தா | ஈவினைப் பிள்ளையார் கோவில். மண்டபம் |

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கூட்டங்களுக்குச் சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**இல 857, கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம்.**

(சி-7965)

**திரு.கி.சந்திரசேகரன்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை மேவிப்பாயும் வெள்ளத்தால் நெருக்கடிக்குள்ளான போக்குவரத்து

(கிளிநொச்சி)

**வீதியை மேவிப்பாயும் வெள்ளத்தால் கிளிநொச்சியின் பல பகுதிகளில் போக்குவரத்து சேவைகள் பாதிப்படைந்துள்ளது.**





நிலவி வரும் சீரற்ற கால நிலையால் கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, சிவபுரம் மற்றும் பாலாவி உள்ளிட்ட கிராமங்களுக்கான வீதி வெள்ளநீரில் மூழ்கிக் காணப்படுவதனால் குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அவசர நோயாளி ஒருவரை உழவு இயந்திரத்தில் ஏற்றி முழங்காவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

பொது மக்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் உழவு இயந்திரத்தினை பயன்படுத்தியே போக்குவரத்து செய்கின்றனர்.

வன்னேரிக்குளம் வான் பாய்வதன் காரணமாக கிளிநொச்சி மேற்கிற்கான பேருந்து சேவைகள் இடம் பெறுவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. வன்னேரிக்குளம் ஜெயபுரம் வீதியின் இரு இடங்களில் பெருங்குழிகள் உருவாகி உள்ளன. இதனைக் கடந்து பேருந்துகள் பயணிப்பதில் பெரும் இடர் ஏற்பட்டுள்ளது.


அதேவேளை பல்லவராயன் கட்டுக்குளத்தின் கட்டு பகுதி ஊடாக உடைப்பெடுத்து நீர் வெளியேறுவதனால். குறித்த வெள்ள நீர் மன்னார்-யாழ்ப்பாணம் வீதி ஊடாக ஊடறுத்து செல்வதனால் குறித்த வீதி ஊடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

வன்னேரிக்குளம் வான் பாய்வதன் காரணமாக கிளிநொச்சி மேற்கிற்கான பேருந்து சேவைகள் இடம் பெறுவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. வன்னேரிக் குளம் ஜெயபுரம் வீதியில் இரு இடங்களில் வன்னேரிக் குளம் வான் வெள்ளம் வீதியினை குறுக்கறுத்து பாய்வதன் காரணமாக இரு இடங்களில் பெருங் குழிகள் உருவாகி உள்ளன. இதனைக் கடந்து பேருந்துகள் பயணிப்பதில் பெரும் இடர் ஏற்பட்டுள்ளது. (நி-6-100-350)



# வவு.வான்பாயும் 479 குளங்கள்

## 64 குளங்கள் உடைப்பெடுப்பு அனர்த்த முகாமைத்துவ பிரிவு



(குருமன்காடு)

வவுனியாவில் 479 குளங்கள் வான் பாய்வதுடன் இதுவரை 64 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டதில் உள்ள குளங்களிற்கான நீர்வரத்து அதிகரித்தமையினால், குறிப்பாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 620 குளங்களில் 456 குளங்களும், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் 17 குளங்களும், மத்திய நீர்ப்பாசன தி[illegible]க்களத்தின் கீழ் 6 குளங்களும் வான் பாய்கின்றது.

இதேவேளை பாலிக்குளம், சின்னசிப்பிகுளம், தேக் கம்குளம், பிரமநாலங்குளம், பரயநாலங்குளம் உட்பட 64 குளங்கள் உடைப்பெடுத்த நிலையில் கமநல அபிவிருத்தி திணைக்களம், இராணுவம், கிராம மக்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் இணைந்து குளத்தினை மறுசீரமைத்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-6-250)




## காணாமல் போன உறவுகளிடம் துணுக்காயில் பதிவு நடவடிக்கை



(நெளுக்குளம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினால் நேற்று முன்தினம் காணாமல் போனோர் உறவுகளிடமிருந்து மேலதிகமான பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது

இதன்போது கருத்து தெரிவித்த காணாமல் போனோரின் உறவுகள் தமக்கு இழப்பீடுகள் எதுவும் தேவையல்ல, தமக்கு தமது உறவுகளை தருமாறே வேண்டி நிற்கிறோம்.

அதேவேளை தமக்கு இறப்பு சான்றிதழ்களை வழங்க அவர்கள் எத்தனிப்பதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்துரைத்த காணாமல் ஆக்கப்டோருக்கான அலுவலகர் தமக்கு இதுவரை 21,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளது எனவும்அதிலும் 4786 முறைப்பாடுகளுக்கு தாம் விசாரணைகளை முடித்துள்ளதாகவும் அதிலும் 3400 விண்ணப்பங்களில் இடைக்கால நிவாரணத்தை அவர்கள் கேட்டுள்ளார்கள் என தெரிவித்தார்.

மேலும் காணாமல் செய்யப்பட்டதுக்கான சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ் என்பவற்றை உரிய விசாரணைகள் செய்து அவர்களுக்கு வழங்குவதற்கு தமது அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார். (நி-6-2[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

20

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிந்திய சமர்ப்பிப்புக்கள் தொடர்பாகவும் வெளிப்படுத்தாமை தொடர்பாகவும் எடுக்கப்படவேண்டிய தோதான வழிமுறைகளுக்கு ஏற்பாடு செய்தல் பகிரங்கப் பணிகளை அல்லது அலுவலக முறையான செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் எழுகின்ற கள்ளமான முறையிலான செல்வ மீட்டலை அல்லது அக்கறை முரண்பாடுகளை பகிரங்க நுண்ணாய்வுக் கூடாகத் தடுத்தல் அத்துடன் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

யார் யார் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் செய்யவேண்டும்.

மேற்குறித்த ஏற்பாடுகள், பின்வரும் வகுப்புக்களுள் அல்லது விவரிப்புக்களுள் ஏதேனுமொன்றைச் சேர்ந்த எவரேனும் ஆளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஜனாதிபதி பிரதம அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணங்களின் ஆளுநர்கள் மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மாகாண பகிரங்க சேவையின் பணியாட்தொகுதி அலுவலர்கள் உள்ளூர் அதிகார சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பணி யாட் தொகுதி அலுவலர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளும் பகிரங்க அலுவலர்களும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நீதி அலுவலர்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களும் அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள பணியாட்தொகுதி அலுவலர்கள் அரசியலமைப்பின் 41அ(1)(உ) என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக விராத அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் அரசியலமைப்பின் 41 ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஆணைக் குழுக்களின், விடயத்துக்கேற்ப, தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள் இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச வங்கிகளின் பணியாட்தொகுதி அலுவலர்கள் அரசியலமைப்பின் 41அ(1)(இ) என்னும் உறுப்புரையின்கீழ் அல்லது ஏதேனும் நியதிச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களின் பணியாட்தொகுதி அலுவலர்கள்.

ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வை ஆணைக்குழுக்களின் அல்லது குழுக்களின் தவிசாளர்கள், ஆணையாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பணியாட்தொகுதி அலுவலர்கள்.

ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சபைகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அலுவலர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களினதும், மாகாண சபைகளின் உறுப்பினர்களினதும் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்களினதும் தனிப்பட்ட பணியாட்தொகுதி உறுப்பினர்கள்.

தரைப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை தரைப்படையின் அலுவலர்கள் கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை கடற்படையின் அலுவலர்கள் இலங்கை வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை வான்படையின் ஆணை பெற்ற அலுவலர்கள்.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டம், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் அல்லது தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் கீழான தேர்தல்களின் நோக்கங்களுக்காக ஏற்று அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பதவி தாங்குநர்கள் தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற தொழிற் சங்கங்களின் நிறைவேற்றுனர்கள்.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் அல்லது உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின்கீழ் நடைபெறவேண்டியுள்ள தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள்.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவு பெற்றுள்ள எக்கம்பெனிகளில் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாத பங்குகள் அரசினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வைத்திருக்கப்படுகின்றனவோ, அக் கம்பெனிகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்தொகுதி அலுவலர்கள் இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் உள்ளடக்கப்பட்டனவாகவுள்ள நிதி நிறுவனங்களின் முகாமைத்துவ அல்லது மேற்பார்வைசார் வகிபாகங்களிலுள்ள பணியாட்தொகுதியினர் இலங்கை இராசதந்திரத் தூதரகங்களின் தலைவர்கள் இலங்கை இராசதந்திரத் தூதரகங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள்.

செய்தித்தாள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எந்த செய்தித்தாள்கள் தொடர்பில் வெளிப்படுத்துகைகள் செய்யப்பட்டுள்ளனவோ அந்த செய்தித்தாள்களின் தனியுரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்தொகுதியின் உறுப்பினர்கள்.

1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்பாடல்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஊடகக் கம்பெனிகளின் தனியுரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்தொகுதி உறுப்பினர்கள்.

1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவி தாங்குநர்கள் அத்துடன் வேறு அலுவலர்களின் அந்தந்த அலுவலகங்களில் அவர்கள் புரிகின்ற பணியின் தன்மையைக் கவனத்துட்கொண்டு, அத்தகைய அலுவலர்கள் இலஞ்சத்துக்கு அல்லது ஊழலுக்கு பலியாகக்கூடிய தன்மையைக் கருத்திலெடுப்பதன் மூலம் உயர் ஆபத்து வகுதிகளை ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களின் வகுதியினர்.

இவ்வாறு இப்பட்டியல் "இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆள்" ஒருவரெனக் குறிப்பீடு செய்யப்பட்டு நீண்டு செல்கிறது.

**எச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றி வெளிப்படுத்துகை செய்யவேண்டும்?**

பின்வரும் எல்லாமும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றை, செய்தல் வேண்டும்:

அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும் அவரது வாழ்க்கைத் துணையின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அவரில் தங்கிவாழும் பிள்ளைகளின் வயதுகளைப் பொருட்படுத்தாது, அப்பிள்ளைகள் ஒவ்வொருவரின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அவரில் தங்கிவாழும் வேறு எவரேனும் ஆட்களின் வயதுகளைப் பொருட்படுத்தாது, அவ்வாட்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளுடன் வேறு எவரேனுமாள் பரஸ்பர உரிமைகளையும் கடப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளுமிடத்துத் தவிர, வெளிப்படுத்துகைத் திகதிக்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர், இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளுடன் கூடிவாழ்ந்து பொதுவான வீட்டைப் பகிர்ந்து கொள்கின்ற அத்தகைய வேறு எவரேனும் ஆளின் சொத்துக்களும் பொறுப்புக்களும்.

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளை எப்பொழுது செய்ய வேண்டும்?

(1) முதலாவது நியமன வெளிப்படுத்துகை- நியமனத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள்

(2) ஆண்டு வெளிப்படுத்துகை- (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆண்டுதோறும்

(3) பதவிக்கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப்படுத்துகை- விடயத்துக்கேற்ப அவரது தொழிற்காலத்தின் முடிவை அல்லது அவரது ஓய்வுபெறும் திகதியை அல்லது பதவியிலிருந்து நீக்கப்படும் திகதியை உடனடுத்துப் பின்னர் பதினான்கு நாட்காலப்பகுதியினுள்

(4) ஓய்வுபெற்ற பின்னரான வெளிப்படுத்துகை மேற்குறிப்பிட்ட பந்தியின் கீழ் வெளிப்படுத்துகை செய்யப்பட்ட ஆண்டை உடனடுத்துப் பின்வரும் தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகள்

(5) நிமித்த வெளிப்படுத்துகை பத்து மில்லியன் ரூபா தொகையினதான அல்லது பத்து மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டதாக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று நிகழ்கின்றவிடத்து, அத்தகைய நிகழ்வுத் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அத்துடன் விடயத்துக்கேற்ப, ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாது இருக்க முயற்சி செய்.
உண்மையாய் இருக்க மட்டுமே உழைத்திடு.
~ ஹேராம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முரண்பாட்டோடு நகருகின்ற வடக்கு மாகாண அரச நிர்வாகம்

ஒரு ஜனநாயக நாட்டில் அரச நிர்வாகம் என்பது மிகவும் முக்கியமானது. ஆட்சி மாறுவது காட்சி மாறுவது போன்றது

ஆனால் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களும் அரசியலமைப்புகளும் சுற்று நிருபங்களும் திருத்தம் செய்தாலன்றி மாற்ற முறாது.

எனவே இருக்கக்கூடிய சட்டங்களின் அடிப்படையிலும் சுற்றுநிருபங்களின் பிரகாரமும் நடைமுறை நிலைப்பாடுகளின் அடிப்படையிலும் அரச நிர்வாகம் இயங்க வேண்டும்.

இதை மீறுகின்றபோது நிலைமை மிகவும் மோசமாகுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

அதிலும் ஒரு காலத்தில் அரச நிர்வாகங்களில் செல்வாக்குக் கலாசாரங்கள் புரையோடியிருந்தபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதென்பது முடியாத காரியமாக இருந்தது.

ஆனால் சமகாலத்தில் சமூக வலைத் தளங்கள் ஊடாகப் பொதுமக்களும் அரச பணியாளர்களும் ஏனையவர்களும் தத்தம் கருத்துக்களைப் பகிர்வு செய்வதற்கும் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் நிறைந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதனால் அரச நிர்வாகங்களில் ஏற்படுகின்ற தவறுகள், பக்கச்சார்புகள் தொடர்பில் சமூகவலைத்தளங்கள் விளாசித் தள்ளுகின்றன.

இந்த நிலைமையானது அரச உயர் அதிகாரிகளுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையில் வெறுப்பை - எதிர்ப்பை - முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றன.

இஃது பொதுவாக ஏற்படக்கூடிய நிலைமையாயினும் குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் இந்த நிலைமை கிரந்தம் முற்றிப்பௌத்திரமாக்கிய நிலைக்கு வந்துவிட்டது.

எனவே இது விடயத்தில் வடக்கு மாகாண நிர்வாகம்மிகவும்விழிப்பாக இருப்பது அவசியம்.

அதிலும் குறிப்பாக, வடக்கு மாகாண ஆளுநர் மிகவும் கண்டிப்பாகவும் தெளிவாகவும் விழிப்பாகவும் இருப்பது அவசியம்.

இருந்தும் அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்தில் கடமைப் பொறுப்பில் இருந்த ஆளுநர்கள் அரசாங்கத்துக்கு. விசுவாசமாக இருந்து தமது பதவியைத் தக்கவைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

இதனால் அவர்கள் பொதுமக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைக் கிடப்பில் போடுவதையே செய்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக அரச நிர்வாகம் சார்ந்து; அரச பணியாளர்களும் பொதுமக்களும் பாதிப்படையும்போது, அது விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் (கள்) மெத்தனப்போக்கை அல்லது காலம் கடத்துவதையே செய்கின்றனர்.

இதன் காரணமாக வட மாகாண அரச நிர்வாகம் உயர்ந்த செயற்றிறனை பதிவு செய்ய முடியாமல் இருப்பதைக் காண முடியும்.

இவை தவிர, அரச உயர் பதவிகளில் இருப்பவர்களை தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நியமிப்பதன் காரணமாகவும் அவர்களை அடிக்கடி இடமாற்றுவதிலும் வடக்கு மாகாண அமைச்சுகளில் முரண்பாட்டு நிர்வாகம் மலிந்து கிடக்கிறது.

இங்குதான் பிரச்சினைகளும் சிக்கல்களும் கருக்கட்ட ஆரம்பித்து ஈற்றில் உயர் அதிகாரிகளின் தவறு என்று முடிவு வருகின்றபோது, அரச உயர்மட்டத்தை எதிர்க்கும் அளவில் அரச உத்தியோகத்தர்கள் வீரியமடைகின்றனர்.

இதுதான் இப்போது நம் வடபகுதியில் நடந்தாகிறது. என்ன செய்வது பதவியில் இருக்கின்ற ஆளுநர் விழித்திருந்து நிலைமையை கவனிக்காவிடில் வடமாகாணத்தின் நிலைமை இன்னும் மோசமாகும். கவனம்.

# யாழில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோர் அதிகரிப்பு

யாழில்பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தால் பாதிக்கப்பட்ட குடும் பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அந்தவகையில் இது வரை 2,033 குடும்பங்களைச் சேர்ந்த 6,738 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா நேற்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளப்பெருக்கு காரணமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும்,

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 259பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 712 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 783 குடும்பங்களைச் சேர்ந்த 2,683 பேரும்,

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 117 குடும்பங்களைச் சேர்ந்த 439 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 144 பேரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 260பேரும்,

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேரும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,33)

# மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரம்

## புதுக்குடியிருப்பில் ஒருவர் கைது

புதுக்குடியிருப்புப் பகுதியில் பாடசாலை மாணவர்களையும், இளைஞர்களையும் இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரம் செய்து வந்த முக்கிய சந்தேக நபர் ஒருவர் 300 போதை மாத்திரைகளுடன் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆடைதொழிற்சாலை ஊழியர்களை இலக்கு வைத்து குறித்த சந்தேகநபர் போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் தலைமையிலான பொலிஸார் நேற்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த சந்தேக நபர் 300 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை பொலிஸார் கைது செய்வதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட போதும் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிசெல்ல முற்பட்டு பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு நேசன் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். ஒரு போதை மாத்திரையின் விலை 250 ரூவிற்கு நகர் பகுதியில் இவர் விற்பனை செய்து வந்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் புதுகுடியிருப்பு பகுதியில் பல்வேறுபட்ட இடங்களில் போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபரையும் போதை மாத்திரைகளையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,299)

## நெடுந்தீவில் கைது செய்யப்பட்ட

# 13 இந்திய மீனவர்களும்

## நிபந்தனை அடிப்படையில் விடுதலை

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களையும் நிபந்தனை அடிப்படையில் ஊர்காவற்துறை நீதிமன்றத்தினால் நேற்று வியாழக்கிழமை (21) விடுவிக்கப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் மற்றும் கோட்டைபட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்றிருந்த நிலையில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கடற்படையால் கடந்த 6ம் திகதி கைது செய்யப்பட்டனர்.

13 மீனவர்களின் வழக்கு நேற்று வியாழக்கிழமை (21) ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மீனவர்களுக்கு எதிராக யாழ்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரிகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தை மீனவர்கள் ஒப்புக் கொண்டதையடுத்து, ஐந்தாண்டுகள் ஒத்தி வைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத் தண்டனை என்னும் நிபந்தனையுடன் விடுதலை செய்து ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

மூன்று படகின் உரிமையாளர்களுக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சு ஊடாக இவ் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் மூன்றாம் மாதம் 11ஆம் திகதி வழக்கில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (ம-7,60)

# நெல்லியடியில் வாள்களுடன் இளைஞன் ஒருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட விஷேட சோதனை நடவடிக்கையில் நான்கு வாளை எடுத்துச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை (21) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பகுதியில் பொலிஸார் விஷேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது நான்கு வாளை எடுத்துச் சென்ற இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-7,60)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முள்ளியவளையில் முற்றுகை

(முல்லைத்தீவு)

முள்ளியவளை புதாரிகுடா பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல இடங்களில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து முன்னெடுத்து வருகின்றார்கள்.

அந்தவகையில் முள்ளியவளை பகுதியில் நேற்று முன்தினம் கஞ்சா வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நேற்று முன்தினம் சட்ட விரோதமாக கசிப்புக்காய்ச்சி விற்பனை செய்யும் இடம் ஒன்று முற்றுகை இடப்பட்டு பெருமளவான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் இந்த நடவடிக்கையில் 9 பரல்கள் மற்றும் கசிப்புக் காய்ச்ச பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பன இதன் போது மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் இரகசியமான முறையில் கசிப்பு காய்ச்சி வெளியிடங்களுக்கு விநியோகித்து வரும் குறித்த பகுதியே பொலிஸாரின் சிறப்பு அதிரடிப்படையினரின் முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பொருட்களையும் சான்று பொருட்களையும் மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள். (ம-7,299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 2

காவியத் தொடர் 360





துக்கொண்டு வாலினால் அவனுடைய நெற்றியைத் தடவத் தொடங்கியது.

வாளையும் வேலையும் அச்சமின்றித் தாங்கக்கூடிய அவ்வீரனுக்குப் பூனை தன் வாலினால் தடவும் அனுபவத்தைத் தாங்க முடியவில்லை. எழுந்து, பூனையை அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கினான். அவனுடைய அறைக்கும் அடுத்த அறைக்கும் மத்தியில் இருந்த சுவரின் உச்சியில் கொஞ்சம் இடிந்து பொக்கை விழுந்திருந்தது. அதன் வழியாகப் பூனையைத் தூக்கி எறிந்தான்.

அடுத்த அறையில் சிறிது நேரம் ஒரே ரகளையாயிருந்தது. மனிதக் குரலின் கூப்பாட்டுடன் பூனையின் கரமுரா சத்தமும் சேர்ந்து கொண்டது. சற்று நேரத்துக்குப் பிறகு "போ! தொலை!" என்ற குரல் கேட்டது. பூனையின் 'மியாவ் மியாவ்' சத்தம் கொஞ்ச தூரம் வரையில் சென்று மறைந்தது. பிறகு நிசப்தம் நிலவியது.

வந்தியத்தேவன் கண்ணயர்ந்தான். அரைத்தூக்க நிலையில் ஒரு கனவு கண்டான். மிக இன்பமான கனவு. இளைய பிராட்டி குந்தவை அவன் அருகில் வந்து உட்கார்ந்து அவன் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். ஆகா! பூனையின் வாலுக்கும் இளவரசியின் கைவிரலுக்கும் எத்தனை வித்தியாசம்!

கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அங்கே படுத்திருந்தது. அட கடவுளே! இதைக் கால் மாட்டில் வைத்துக் கொண்டு எப்படித் தூங்குவது? உதைத்துத் தள்ளினான். பூனை நகர்ந்து சென்றது. கண்ணை மூடினான் மறுபடி அவன் பக்கத்தில் கையில் ஏதோ மிருதுவாகத் தட்டுப்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அவன் பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டு செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தது!

மறுபடியும் கையினால் பிடித்துத் தள்ளினான். பூனை தூரச் சென்றது. மீண்டும் கண்ணை மூடினான். தலை மாட்டில் வந்து பூனை படுத்

சட்டென்று மறுபடி விழிப்பு வந்தது. கனவு கலைந்து விட்டதே என்று வருத்தமாயிருந்தது.

அடுத்த அறையிலிருந்து யாரோ சுவரைத் தட்டினார்கள் அந்தப் பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும்.

"யார் அங்கே? பூனையை எடுத்து எறிந்தது யார்?"

வந்தியத்தேவன் மறுமொழி சொல்லவில்லை. மௌனமாயிருந்தான். ஆ! இது என்ன, பூனை பிறாண்டுவது போன்ற சப்தம் மறுபடியும்? இல்லை, இல்லை! யாரோ அப்புறத்தில் சுவரில் ஏறுவதற்கு முயல்கிறார்கள்!

வந்தியத்தேவன் எழுந்திருக்கவில்லை. படுத்தபடியே கவனமாய்க் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் முன் ஜாக்கிரதையாகக் கைமட்டும் கத்தி பிடியில் இருந்தது.

சுவரின் உச்சியிலிருந்து பொக்கையில் முதலில் இரு கைகள் தெரிந்தன. பிறகு ஒரு முண்டாசு தெரிந்தது. முண்டாசுக்கடியில் ஒரு முகம் மேலே வந்து குனிந்து பார்த்தது. ஆ! இவன் ஆழ்வார்க் கடியான் அல்லவா? தலைப் பாகை கட்டியிருப்பதால் தோற்றத்தில் சிறிது மாறியிருக்கிறான்! ஆனால் ஆழ்வார்க்கடியான் என்பதில் சந்தேகமில்லை.

இவன் எதற்காக, எப்படி இங்கே வந்தான்? நாம் இருப்பது தெரிந்துதான் வந்திருக்கவேண்டும்! உதவி செய்ய வந்திருக்கிறானா? அல்லது இடையூறு செய்ய வந்திருக்கிறானா? வந்தியத்தேவன் எழுந்து உட்கார்ந்து, "ஓ வீர வைஷ்ணவரே! வருக! வருக! சிவ புண்ணிய ஸ்தலமாகிய திருக்கேதீசுவரத்துக்கு வருக! வருக!" என்றான்.

"தம்பி! நீதானா? நினைத்தேன்! வேறு யார் இவ்வளவு அமுக்குப் பிள்ளையாராகக் குரல் காட்டாமல் உட்கார்ந்திருக்க முடியும்?" என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிக் கொண்டு அறையில் குதித்தான். (தொடரும்..)



# சிறுவர் அரங்கம்

## அறிவுப் பானை

வீரசிம்மன் ஒரு குறுநில மன்னர்! சிற்றரசராக இருந்த அவர். அக்பருடைய ஆதிக்கத்தில் இருந்தார். முகலாய சாம்ராஜ்யத்திற்கு கப்பம் செலுத்தி, அவர்களுடன் நட்புறவோடிருந்தார். தனது ராஜ்யத்தில் குடிமக்களின் நிம்மதியையே பெரிதாக மதித்த வீரசிம்மன், முகலாயர்களின் அடிமையாக இருந்ததைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், அவருடைய ராஜ்யத்தில் இருந்த சில இளைஞர்கள் மன்னர் தன் மானத்தை அடகு வைத்து விட்டதாகக் கருதினர். அந்த இளைஞர்கள் தயக்கமின்றி அவரை அணுகி அவருடைய கொள்கைக்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

சுதந்திரம் தங்களுடைய பிறப்புரிமை என்றும் நாட்டின் அமைதிக்காக, முகலாயர்களின் அடிமைகளாகத் திகழ்வது அவமானம் என்றும் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர். அதற்கு வீரசிம்மன், "நானும் சுதந்திரத்தை விரும்புகிறேன். ஆனால் அதைப் பெறுவதற்காக, இரத்த ஆறு ஓடுவதை நான் விரும்பவில்லை, முகலாயர்கள் மிகப்பலம் பொருந்தியவர்கள். அவர்களுடைய படைப்பலத்திற்கு முன் குறுநில மன்னனாகிய என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்றார்.



அதற்கு அவர்கள் "படைப்பலத்தை மட்டும் ஏன் ஒப்பிடுகிறீர்கள்? நம்முடைய அறிவினால் முகலாயர்களை வெற்றி கொள்ள முடியாதா?" என்றனர். "நம்மிடம் அத்தகைய அறிஞர்கள் இருக்கிறார்களா?" என்றார் வீரசிம்மன்.

"ஏன் இல்லாமல்?" என்றனர் இளைஞர்கள்.

"என்று தெரிந்து கொள்ளுங்கள்! அக்பரின் சபையில் உள்ள அறிஞர்களைப் போல் வேறு எங்குமே காண முடியாது" என்றார். "அவர்களுடைய அறிவுத்திறமையை சோதித்துப் பார்த்து விடலாமே!" என்று சவால் விட்ட ஓர் இளைஞன் "நான் ஒரு சோதனை சொல்கிறேன். நீங்கள் அக்பரிடம் அவருடைய தர்பாரிலிருந்து அறிவு நிரம்பிய ஒரு பானையை அனுப்பச் சொல்லி வேண்டுங்கள்" என்றான். "அறிவு நிரம்பிய பானையா? அது ஏன்? தண்ணீரைப் பிடிப்பதுபோல் பானையில் அறிவை நிரப்ப முடியுமா?" என்று கேட்டார் மன்னர்.

"அது இயலாது என்று நினைக்கிறீர்களா?" என்றான் அவன்.

"ஆம்! அது முடியாத ஒன்று!" என்றார் மன்னர்.

"இயலாததை செய்து முடிப்பவன் தான் அறிவாளி! அக்பரின் தர்பாரில் உலகிலேயே சிறந்த அறிவாளிகள் உள்ளனர் என்று சொன்னீர்களே! அத்தகைய தலை சிறந்த அறிவாளிகள் நாங்கள் கேட்டதை செய்யட்டுமே!" என்று திமிராகக் கேட்டான் அவன். மன்னரும் வேறு வழியின்றி அதற்கு ஒப்புக் கொண்டார்.

சில நாட்கள் கழித்து, வீரசிம்மன் நன்கு பேசவல்ல ஒரு தூதனை கை நிறைய வெகுமதிகளுடன் அக்பரிடம் அனுப்பினார். வீரசிம்மனின் தூதன் அக்பரின் தர்பாரில் நுழைந்து அவரை வணங்கி விட்டு, தனது மன்னர் கொடுத்தனுப்பியிருந்த வெகுமதிகளை அக்பரிடம் சமர்ப்பித்துவிட்டு, மன்னரின் வாழ்த்துகளையும் தெரிவித்தான்.

"வீரசிம்மன் நலமாக இருக்கிறாரா?" என்று அக்பர் வினவினார். "சக்கரவர்த்தியின் தயவு இருக்கும் போது எங்கள் மன்னரின் நலத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா!" என்றான் தூதன் பணிவுடன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளத்தினுள்...

இளம்பெண் ஒருவர் வீழ்ந்ததை அவ தானித்த அப்பகுதியில் நின்றவர்கள் உடனடியாக விரைந்து செயற்பட்டு பெண்ணை மீட்டதுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்த னர்.

இச்சம்பவத்தில் ஆடைத் தொழிற் சாலையில் பணிபுரியும் நாக இலுப் பைக்குளத்தைச் சேர்ந்த 17 வயதான ஜான்சிகா என்ற பெண்ணே உயிரி ழந்தவராவார். (ம-7,60)

## கிணற்றுக்குள்...

பெண் குழந்தை ஒன்று நேற்று வியா ழக்கிழமை மாலை உயிரிழந்துள்ளது.

இதில் பெருங்குளம், பள்ளிக்குடா, பூநகரியைச் சேர்ந்த ஒன்றரை வயது டைய புஸ்பராஜா மிதுசனா என்ற குழந்தையே உயிரிழந்தாகும்.

வீட்டிற்கு அருகாமையில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் குழந்தை தவறி வீழ்ந்துள்ளது. குழந்தை மீட்கப் பட்டு கிளிநொச்சி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு குழந்தை உயிரிழந்துள்ளது. (ம-7,60)

## 'வட்ஸ்அப்'...

ஸார் நீதிமன்ற அனுமதி பெற்று தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன்போதே சந்தேகநபர்கள் வட்ஸ் செயலி ஊடாக மாணவர்களு டன் தொடர்புகளை பேணி, போதைப் பொருட்களை விற்பனை செய்து வந் தமை கண்டறியப்பட்டுள்ளது

அந்நிலையில் சந்தேகநபர்களின் தொலைபேசிகளை பறிமுதல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் பல மாண வர்கள் இவர்களுடன் தொடர்புகளை பேணி வந்துள்ள நிலையில் அவர்களை இனம் காணும் நடவடிக்கையையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## போதைப்பொருட்...

பொலிஸ்மா அதிபரின் விசேட போதைப்பொருள் தடுக்கும் செயற் பாட்டுக்கு அமைவாக நெல்லியடிப் பொலிஸாரும் விசேட சோதனை நட வடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

இந்நிலையில் நேற்று வியாழக் கிழமை நெல்லியடிப் பொலிஸார் மேற் கொண்ட தேடுதல் நடவடிக்கையில் வீடு ஒன்றிலிருந்து 16 கைத் தொலை பேசிகளும் ஆறு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்களும் மீட்கப்பட்டதுடன் இத னுடன் தொடர் புடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,60)

## வடக்கில்...

மேலும் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட் டத்திலும் இடைக்கிடையே மழை பெய் யும் என வளிமண்டலவியல் திணைக் களம் அறிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையுடனான வானிலை, பலத்த காற்று மற்றும் மின் னலினால் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக் கைகளை பொதுமக்கள் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

## அதிபர்...

அதிபர் நியமனங்களில் தவறுகள் அல்லது முறைகேடுகள் நடைபெற்றி ருக்குமாயின் அதுதொடர்பாக ஆரா ய்ந்து, அவை நிவர்த்தி செய்யப்படும் எனவும், அரச சுற்றுநிருபங்களின் அடிப் படையில் மேற்கொள்ளப்படுகின்ற நியமனங்களில் தலையிடுவது, மக்க ளுக்கு செய்கின்ற அநீதியாக அமைந்து விடும் என அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் புதிதாக அதிபர் நியமனம் பெற்றுக் கொண்டவர் களில் ஒரு பகுதியினர் நேற்று வியா ழக்கிழமை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையாழில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் சந் தித்தபோதே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

புதிதாக அதிபர்களாக நியமிக்கப் பட்டிருப்பவர்களில் ஒரு பகுதியினர் வெளிமாவட்டங்களில் உள்ள வெற்றி டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பவர் களில் பெரும்பாலானவர்கள்ஏற்கெனவே ஆசிரியர்களாக வெளி மாவட்டங் களில் கடமையாற்றியிருப்பது டன், பல்வேறு காரணங்களினால் கஷ்டங் பதுடன், தம்மை சொந்த மாவட்டங்களில் கடமையாற்ற சந்தர்ப்பம் அளிக்கு மாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

குறித்த கோரிக்கைகள் தொடர் பாக, சம்பந்தப்பட்ட அதிகரிகளின் கருத்துக்களையும் ஆதங்கங்களையும் கேட்டறிந்த அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, குறித்த விடயம் தொடர்பாக பிரஸ் தாபித்ததுடன், நியமனங்கள் அனைத் தும் நியாயமானதாகவும் சுற்றுநிருபங் களுக்கு அமைவானதாகவும் இருக்க வேண் டும் என்பதை வலியுறுத்தினார்.

மேலும், மனி தாபிமான கார ணங்களையும் பரிசீலிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## எத்த...

வித்தார்.

நாட்டிற்குபெரும் கேடாக விளங் கும் போதைப் பொருள் பாவ னையையும் பாதாள உலக செயற்பாடுகளை யும் ஒடுக்க அனை வரும் ஒத்துழை க்க வேண்டும் என வும் அமைச்சர் சுட் டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத் தில் நேற்று நடை பெற்ற ஊடக சந் திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரி வித்த அமைச்சர், "யுக்திய" என்ற பெயரில் முன்னெ டுக்கப்படும் போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நட வடிக்கை குறித்து தற்போது நாடு முழுவதும் பேசப் படுகிறது. இந்த நாட்டில்போதைப் பொருள் வர்த்தக மும் பாதாள உல கச் செயற்பாடு களும் தொடர்ந்து இடம்பெற்று வரு கின்றன. இவ ற்றை யாராவது நிறுத்த வேண்டும். எனவே நான் இதனை நிறுத்த தீர்மானித்தேன். அதற்காகத் தான் "யுக்திய" சிறப்பு நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டது. இந்த செயற்பாட்டில் சமூக பொலிஸ்

குழுக்களுக்கும் விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கை வெற்றி யடைய மக்களின் ஆதரவும் குறிப்பாக ஊடகங்களின் ஆதரவும் அவசியம். முப்பது வருட யுத்தம் வடக்கு கிழக் கில் மாத்திரமே இருந்தது. ஆனால் தற்போதுள்ள இந்த யுத்தம் நாடு பூராகவும் பரவியுள்ளது. இதனை முடி வுக்குக் கொண்டுவர பொதுமக்கள் வழங்கும் ஆதரவு பாதுகாப்புத் துறை க்கு பெரும் பலமாக அமைந்துள்ளது.

எனவே, இதற்குத்தேவையான ஆத ரவையும் சரியான தகவல்களையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என்றார். (ம-7)


அதிர்ஷ்டம் வெல்லப்பட்டது
கனகலிங்கம் திலகவதி
K.S.S.வீதி, யாழ்ப்பாணம்.
நாகபூசணி அம்மன் அருளுடன்
20.12.2023 அபிவிருத்தி லொத்தர் சபை கோடிபதி கப்ருக லொத்தர் சீட்டிழுப்பில் முதற் பரிசாக 20 இலட்சம் வெல்லப்பட்டுள்ளது.
அதே தினம் இடம்பெற்ற மஹஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பில் 100,000 வெல்லப்பட்டுள்ளது.
நீங்களும் விரையுங்கள்
கனகலிங்கம் திலகவதி லொத்தர் கூடுகளுக்கு...
பரிசு விபரங்களை உடனுக்குடன் அறிய
Kanakalingam Thillakavathy என்ற
Facebook பக்கத்தை பார்வையிடுங்கள்
T.P : 077 603 1723
(18312)

லக்கி 7 VIP
திகதி 2023.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 0161
G 5 0 0 2 1 5 G

தன நிதானய
திகதி - 2023.12.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1365
W 13 53 54 78 W
32933

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3577
சீட்டிழுப்பு திகதி 21.12.2023
I 03 12 23 55
I 29222

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 0644
மிதுனம் 05 13 37 50 மிதுனம்
27424 23

மஹஜன சம்பத
திகதி 2023/12/21
சீட்டிழுப்பு இலக்கம் 5335
W 2 2 1 8 9 5

மெகா பவர்
திகதி 21/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1683
O 08 22 24 60 69
24662

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
21.12.2023 வெற்றி வாரம் 043 வர்ணம் ஊதா
F 2 3 2 5 8 1
97682
24,474,495.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2309 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.12.21 தினம் வியாழக்கிழமை
20 23 27 51 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,672,564/-
17410

சனிதா
திகதி 2023.12.21 வெற்றி வாரம் 4470 வர்ணம் சிவப்பு
04 05 35 74 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,554,816.00
09783

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4021 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.21 தினம் வியாழக்கிழமை
22 49 52 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,847,706.80
236830

கப்ருக
U 31 11 18 26 47
1485
2023.12.21 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 480,465,534.20

வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2135
சீட்டிழுப்பு திகதி: 2023.12.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,769,202.40/-
அத கோடிபதி ADA KOTIPATHI
02 11 29 33 C
299525


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IELTS** - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18299)



**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7971)

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்கு உட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


# யாழ்தேவி தடம்புரள்வு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த யாழ்தேவி புகையிரதம் தடம்புரண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து கல்கிஸ்ஸை நோக்கி பயணித்த யாழ்தேவி கடுகதிரயிலின் இரண்டு பெட்டிகள் மஹவ நிலையத்திற்கு அருகிலேயே தடம்புரண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் வடக்கு ரயில் பாதையின் போக்குவரத்து மஹவ ரயில் நிலையத்திற்கு அருகில் தாமதமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


**CANADA VISITOR VISA**

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7971)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



# சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.

- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான 22 கரட் தங்க ஆபரணங்களுக்கும் யாழில் எங்கும் இல்லாத விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

**Box Chain : 167,750/=**

- அனைத்து ஆபரணங்களும் 22 கரட் என உறுதிப்படுத்தி தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.
- இச்சலுகை இம்மாதம் 30ஆம் திகதி வரை மட்டுமே

(18313)

077 165 1729 | 077 773 0567
021 222 8334



# Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 282/= (Max 5Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg அரிசி மா | - 199/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 299/= (Max 2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= |
| 1 Kg நீட்டல் பச்சை அரிசி | - 175/= |
| 1 Kg சம்பா அரிசி | - 230/= (Max 3Kg) |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435/= ~~(3900/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(430/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= ~~(330/=)~~ |
| 500ml Vim Liquid | - 390/= ~~(425/=)~~ |
| 70g Baby Soap | - 112/= ~~(145/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |

1025/= Anchor ~~1080/-~~

(18314)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30



# இணுவில் திருப்பதி

அருள்மிகு

# திருவேங்கடேஸ்வரர் ஆலயம்

## இணுவில், மருதனார்மடம்



**சுவர்க்க வாசல் ஏகாதசி - 2023**

காலம் :- 23.12.2023 சனிக்கிழமை

அதிகாலை 5.50 மணிக்கு பெருங்கதவு திறக்கப்பட்டு பெருமாளின் விஸ்வரூப தரிசனம் ஆரம்பமாகும்.

காண வாரீர் அடியார்களே!
அவர் பேரழகு கண்டு,
பேரானந்தம் அடைவோமாக!

ஓம் நமோ நாராயணாய!

ஆலய அறங்காவலர்
ச.கணேசலிங்கம்

021 224 2300

இணுவில் திருப்பதி

(18311)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.